# <u>முதன்மை மாவட்ட நீதிமன்றம், பெரம்பலூர்.</u>

# <u>MCOP. No.161/2021</u>

2024-ம் ஆண்டு நவம்பர் திங்கள் 07-ஆம் நாள் வியாழக்கிழமை மனுதாரர்/எதிர்மனுதாரர் தரப்பு சாட்சியமாகிய **ம.சா.2 வது** நபரின் வாக்குமூலம். (1969-ம் ஆண்டின் 54-வது விதியின் 9-வது பிரிவின் ஏற்பாட்டின்படி) **திருமதி. ஆ. பாப்பாத்தி, கிரேடு-1 பெஞ்ச் கிளார்க்** என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ஏழுமலை | வயது | : | |
| த/பெ (அ) க/பெ | : | கோவிந்தராஜ் | தொழில் | : | |
| ஊர் | : | | சமயம் | : | |
| வட்டம் | : | | சாதி | : | |
| மாவட்டம் | : | | | : | |

<u>**முதல் விசாரணை**</u>

நான் இந்த வழக்கில் பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதிலுள்ள விவரங்கள் எனக்கு தெரியும். பிரமாண வாக்குமூலத்தை படித்து பார்த்து தான் கையொப்பம் செய்தேன்.

<u>**எதிர்மனுதாரர்கள் தரப்பு குறுக்குவிசாரணை**</u>

இந்த விபத்து குறித்து நான் போலீசாரிடம் புகார் கொடுக்கவில்லை என்றால் சரிதான். என்னை போலீசார் விசாரித்தார்கள். வேறு எந்த நீதிமன்றத்திலும் நான் சாட்சியம் அளிக்கவில்லை. எனது ஊர் பாடாலூர். நான் விபத்து நடந்த இடத்திற்கு போக வேண்டிய அவசியமில்லை என்றால் சரியல்ல. இறந்தவரின் மனைவிதான் என்னை சாட்சியம்அளிக்க அழைத்து வந்தார்கள் என்றால் சரிதான். அவர்கள் கேட்டுகொண்டதற்கு இணங்க நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. விபத்து நடந்தது நாவலூர் செல்லும் சாலை. அந்த ரோடு அகலமான ரோடு தான். இறந்துபோனவர் டிவிஎஸ் வண்டியில் வந்தார். பெரிய இருசக்கர வாகனம் அவர் மீது மோதியது. அதில் 3 நபர்கள்

வந்தார்கள். நான் 40 அடி தூரத்தில் பின்னால் வந்து கொண்டிருந்தேன். விபத்து நடந்த நேரம் காலை 10 மணி இருக்கும். அந்த நேரத்தில் அதிக போக்குவரத்து இல்லை. சில வாகனங்கள் சென்று கொண்டிருந்தது. எந்த வண்டி எந்த வண்டிமீது மோதியது என்று நான் பார்த்திருக்க முடியாது என்றால் சரியல்ல. இறந்தவர் தான் ஓட்ட தெரியாது வண்டியை ஓட்டி விபத்தை ஏற்படுத்தினார் என்றால் சரியல்ல. அங்கு கோவில் மற்றும் ஒரு கிரஷர் உள்ளது. நான் பார்க்காத விபத்தை இறந்தவருக்கு உதவ வேண்டும் என்ற நோக்கில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>**

இல்லை.

Sd/-A. Balkis, B.L.,
Principal District Judge
Perambalur.